RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2224

# மாரியம்மன் வழிபாட்டு மரபும் நம்பிக்கை முறைகளும்

**த. தினேஷ் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, வி.இ.டி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டல், ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா

# Mariamman Worship Traditions and Beliefs

**D. Dinesh [a, *]**

[a] Department of Tamil, VET Institute of Arts and science, Thindal, Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: dhineshd@vetias.ac.in

Received: 07.09.2022
Revised: 27-10-2022
Accepted: 05-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

In today's world, from the countries where science has developed to the villages where laymen live, everyone is afraid of God. It is a well-known fact that we are driven from within or outside by an invisible, formless force that we cannot understand or see. The early man gave it many forms and gave it many names, and he followed the methods of worship and rituals out of fear. Man has subjected himself and his dependents to a kind of ritual for all the things he feared and organized himself and his dependents through the instrument of faith. It was this unshakable faith that later led to the emergence of countless theological doctrines. Accordingly, the methods of worship of Mariamman, one of the most widely worshipped Goddesses in Tamil Nadu, and the beliefs found in them are discussed in this paper with relevant data.

**Keywords:** Mariamman Worship, Beliefs, Traditions

## முன்னுரை

ஆதிமனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தி வந்த காலகட்டத்தில் இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மனிதன் முதன் முதலில் இயற்கையைக் கடவுளாக வணங்க ஆரம்பித்தான். இயற்கை சீற்றத்தில் இருந்து தப்பிக்க அதற்கு வழிபாட்டு முறைகளையும் நன்றி கடன் செலுத்த காணிக்கை முறைகளையும் ஆற்ற விரும்பினான். இவ்வாறு இயற்கையை வழிபட்ட மனித இனத்தின் வளர்ச்சியாலும் சமயங்களின் வளர்ச்சியாலும் காலப்போக்கில் கடவுள் கோட்பாடுகளும் கொள்கைகளும் பெருக்கம் அடைய ஆரம்பித்தன.

இதனால் ஒவ்வொரு சமூகத்திலும் தனித்தனி கடவுள் வழிபாடு தோன்றிய பின்னர் பொதுக் கடவுள் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். இதனை நற்றினை "தொன்னுறை கடவுள் சேர்ந்த பராரை மன்றப் பெண்ணை" (1.303) (3-4) எனக் குறிப்பிடுகின்றது. இவற்றில் மாரியம்மன் வழிபாட்டு மரபும் நம்பிக்கை முறைகளையும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடு மற்றும் கடவுட் கோட்பாட்டின் தோற்றம்

வழிபாடு என்ற சொல் "வழிபடு" என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த தொழிற் பெயராகும். "வழிபடு என்னும் சொல்லிற்கு ஊக்கம், வழியிற் செல்லுதல், பின்பற்றுதல் எனப் பலப்பொருள்கள் கூறப்படுகிறது. மக்கள் தம்மைச் சூழ்ந்துள்ளவற்றையும் தமக்கு தேவையாக இருக்கின்ற இயற்கை பொருட்களை முதற்கண் வழிபட்டு வந்தனர்" (Bhakthavachala Bharathi, 1999).

இவ்வகைப் பழங்கால மக்கள் பல்வேறுபட்ட தெய்வங்களை வழிபட்ட போதிலும், தனகேயுரித்தான ஒரு தெய்வமாக “வழிபடு தெய்வம்” என்ற பெயரில் ஒரு தெய்வத்தை ஒதுக்கி வைத்திருந்தனர் (Swaminatha Iyer, 2009). மனிதனின் பலவீனம், இறப்பு என்பவற்றிலிருந்து வெளிப்படும் வல்லுணர்ச்சியே பல்வேறு சமயங்களின் வழிபாட்டு முறையின் தோற்றமாகும் என்பது பகுப்பாய்வு உளவியலாளர்களின் நிலைப்பாடாகும்” (Aldrich, 2000).


இத்தகைய பண்பாட்டுச் சிறப்பின் முதல் கூறு தெய்வ வழிபாடாகும். காலம் காலமாகத் தெய்வ நம்பிக்கைகள் பேணப்பட்டும் வருகின்றது. கோவில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது நம் முன்னோர்களின் வேதவாக்கு. மனிதனின் அச்ச உணர்வே வழிபாட்டின் அடிப்படை என்பது மானிடவியலாளரின் கருத்தாகும். அச்சமும் நன்றியுணர்வும், மக்களின் இறையுணர்விற்கு காரணமாயின “இவ்வகை இறையாற்றல் ஒரு வரம்புக்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுட்கோட்பாடு உருவாகியது” (Gandhi, 2008).

மனிதன் தன் வாழ்வில் நடக்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் இன்றியமையாத காரணம் தாம் வணங்கும் தெய்வத்தின் அருட்செயல்களே என நம்பினான். இந்நம்பிக்கையே அவனது வாழ்வை வழிநடத்தும் ஊன்றுகோலானது. இப்படிப்பட்ட “ஓர் இனக்குழுவானது (மக்கள் கூட்டம்) என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்திருக்கிறதோ அதைப் பொறுத்துதான் தெய்வங்களின் வடிவங்களும் குணங்களும் கதைகளும் அமையும் என்ற தொ. பரமசிவம் அவர்களின் கூற்று இங்கு ஒப்புநோக்கத் தக்கது”.

இவ்வகை கடவுள் வழிபாட்டில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயலிலும் அதற்கான காரணங்களும், காரியங்களும் அறிவியல் உண்மைகளும் பொதிந்தும் செறிந்தும் காணப்படுகின்றன. காரணமின்றி காரியம் இல்லை என்பதைப் போல ஒவ்வொரு ஆண்/பெண் தெய்வ வழிபாட்டு முறையிலும் ஒவ்வொரு பின்புலம் காணப்படுகிறது. இவ்வகையில் எழுந்த தாய் தெய்வ வழிபாட்டுமுறையில் பெண் தெய்வ வழிபாடும் ஒருவகையாகும்.

## பெண் தெய்வங்கள்

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்களும் பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் நிறைந்து காணப்படுகின்றன. நாட்டுப்புறத் தெய்வங்களில் பெண் தெய்வங்களே மிகுதி என்பதால் பெண்தெய்வங்கள் முதன்மை நிலையில் வைத்து விளக்கப்படுகின்றன. “இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்க காலந்தொட்டுச் செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள்”.




மனித உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுத்தவள் என்ற அடிப்படையில் தாயாகவும், என்றும் மாறாத, அழியாத கன்னித் தன்மையுடையவள் என்ற அடிப்படையில் கன்னியாகவும் பெண் தெய்வங்களை வழிபடும் மரபுக் காணப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் கூட இம்மரபு இருந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இவற்றில் மாரியம்மன் வழிபாடு என்பது தமிழகத்தில் பரவலாக வழிபடப்பட்டு வரும் பெண் தெய்வம் ஆகும்.

## மாரியம்மன் வழிபாட்டு மரபு

‘அம்மன்’ என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் பெண் தெய்வங்கள், பெண்மை மற்றும் தாய்மைக் குணங்களை ஒருசேரப் பெற்றவையாக விளங்குகின்றன. பெரும்பாலும் கிராமங்களில் மழை

பெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வேண்டுமென மக்கள் நம்பினர். நாட்டில் உண்டாகும் அம்மை முதலிய நோய்களுக்கு மாறி தான் காரணம் என்றும் அதனை நீக்குவதும் மாறி தான் என்றும் மக்கள் நம்பினர். இவ்வாறு மாரிக்கு செலுத்த வேண்டிய கடனை செலுத்தாவிட்டால் பிழைக்க முடியாது என மக்கள் நம்பினர் என

"ஆறு கடன் நின்றாலும்

மாறி கடன் ஆவாது

மாறி கடன் தீர்த்தவர்க்கு

மனக்கவலை திரும்ப அம்மா"

என நாட்டுப்புறவியல் ஆய்வாளர் சு. சக்திவேல் குறிப்பிடுகின்றார் (Sakthivel, 2021). இந்தத் தெய்வம் மாரி(மழை)அம்மன் என்று அழைக்கப்பட்டது. இந்த மாரியம்மன் பல நோய்களைப் போக்கும் கசப்பு சுவையுடைய வேம்பு மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட சக்தியின் மற்றொரு நிலை என்றும் சொல்கிறார்கள். இதனால் இந்த மாரியம்மனுக்குத் தல விருட்சமாக வேம்பு மரமே இருக்கிறது. இந்த "மாரியம்மன் இடத்திற்குத் தகுந்தபடி பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்". இவ்வாறு பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்லும் மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு ஊர் தோறும் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றது. இதில் தீமிதி விழா, வேம்பாடை தரித்தல், செடல் குத்துதல் முதலிய காணிக்கைகள் இம்மாரி அம்மனுக்கு காணிக்கைகளாக நிறைவேற்றப்படுகின்றன.

## தீமிதித்தல் பற்றிய நம்பிக்கைகள்

மாரியம்மனுக்கு எடுக்கப்படும் இவ்விழா கிராமப்புறங்களில் மிக விமர்சியாக நடைபெறுகின்றது. இவ்விழா ஆரம்பித்த ஒன்பது நாட்களுக்கு முன்பே காப்பு கட்டுவர் அவரை காப்பு கட்டிய பின்பு வெளியூர் செல்லக்கூடாது. அவ்வாறு சென்றால் செல்பவர்கள் மூலம் சக்தி வேறு இடத்திற்கு சென்று விடும் என நம்பினர். மீறி சென்றாலும் இரவு நேரத்தில் பிற ஊர்களில் தங்கங்காது இல்லம் திரும்பும் முறை பின்பற்றப்பட்டது.

## மழை பற்றிய வழிபாட்டு நம்பிக்கை

கண்ணகியே மாரியம்மன் என அழைக்கப்படுகிறது கண்ணகி மழை பொழிய செய்பவள். பின்னாளில் அவளை மாரியம்மன் என்ன பெயர் வழங்கப்பட்டு இருக்க வேண்டும் என நம்புகின்றனர். மேலும் "இதற்கு வலு சேர்க்கும் விதமாக மு வை. அரவிந்தன் அவர்கள் கண்ணகி ஆடி வெள்ளியன்று மதுரையினை எரித்தால் அதனாலேயே ஆடி மாதங்களில் மாரியம்மன் பண்டிகை கொண்டாடும் வழக்கம் நிலவி வருகின்றது என்கிறார்".

மாரி என்றால் 'மழை' என்றும் 'அம்' என்றால் நீர் என்றும் 'அன்' என்பது இன்மை எனப் பொருள்படும். கோடைகாலம் என்றாலே அம்மன் கோவில்களில் திருவிழாக்கள் கலைக்கட்டும். கடுமையான வளர்ச்சி காலத்தில் மாரியம்மனுக்கு பண்டிகை நடத்தினால் அவள் மனம் குளிர்ந்து இந்த பூமிக்கு மழை பொழிவிப்பால் என்ற நம்பிக்கை கிராமப்புறங்களில் இன்றும் நம்பப்படுகின்றது. இன்றும் மழை வரம் வேண்டி பல்வேறு கிராமங்களில் சிறப்பு விழாக்களும் பூசைகளும் நடத்தப்படுவதை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

## கூழ் ஊற்றும் மரபு

மழை தெய்வம் என நம்பப்படும் மாரியம்மனுக்கு ஆடி மாதத்தில் விழா எடுக்கப்படுகின்றது. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி அம்மன் சன்னதியின் முற்றத்தில் ஒன்றுதிரண்டு கூழ் ஊற்றி கொண்டாடி மகிழ்வர். ஊர் மக்கள் சாதி மத வேறுபாடு இன்றி அனைவரும் அவரவர் வீட்டில் இருந்து

கூழ் சமைத்து எடுத்து வந்து பொதுவான இடத்தில் பெரிய கொப்பரைகளில் அதனை ஈட்டு கரைத்து அம்மனுக்கு செலுத்தி பின் அதனை அனைவரும் மகிழ்வுடன் பகிர்ந்து பருகுவர்.

இவர் செய்வதன் மூலம் அம்மனின் மனம் குளிர்ந்து மழை பொழிவிப்பால், தன் வீட்டிலிருந்து கொண்டுவந்து மாரியம்மனின் பசித்தீர்க்க கூழ் செய்து வழிபட்டால் ஊர் பசியினை அவள் தீர்ப்பாள் என மக்களின் நம்பினர்.

## அம்மா சோறு அப்பா சோறு விழா

சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் மழை வேண்டி கொண்டாடப்படும் விழாக்களில் இதுவும் ஒன்று. இரவு நேரத்தில் ஊரில் உள்ள பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் கைம்பெண்கள் முதலானோர் ஒன்று திரண்டு அவ்வூரில் உள்ள அனைத்து வீடுகளிலும் உணவு வாங்கி வந்து ஊருக்கு பொதுவான இடத்திலோ அல்லது கோவிலின் முற்றத்திலோ அதனை ஒன்றாக கலந்த பிசைந்து அம்மனுக்கு படையல் சாற்றி பின் அனைவரும் ஒன்றிணைந்து வழிபட்டு உண்ணுவர்.

அவ்வாறு உண்டு முடித்த பின்னர் பெண்கள் உணவு உண்டு கை கழுவுவதற்காக தண்ணீர் இல்லையே எங்கள் ஊரில் மழைப் பொழிவித்து மக்களின் பசியினை நீ தான் போக்க வேண்டும். எங்கள் வறுமையை போக்க வேண்டும் என மாறடித்து அழுது வழிபடுவர். இவ்வாறு அழுது மாரடைத்து வழிபடுவதால் மாரியம்மன் மனம் இறங்கி மழை பொழிவிப்பாள் வறுமையினைப் போக்குவாள் என கிராம மக்கள் நம்பினர்.

## மழை வேண்டி கும்மி அடித்தல்

இவ்விழா பெரும்பாலும் கிராமப்புறங்களில் மட்டுமே கொண்டாடப்படுகின்றது இதில் பெண்கள் மட்டுமே பங்கு பெறுவர். இவ்விழாவில் ஊர் பெண்கள் அனைவரும் ஒன்று கூடி தலையில் துணி கட்டிக் கொண்டு ஒரு பொதுவான இடத்திலோ அல்லது கோவிலின் முற்றத்திலோ அம்மனை மனதில் நினைத்து கையில் வேப்பிலைக் கொண்டு அல்லது கைகளைத் தட்டிக் கொண்டு சுற்றி நின்று வானத்தினைப் பார்த்து மழை வேண்டி கும்மி அடிப்பர்.

## மழை பற்றிய நம்பிக்கைகள்

மேற்சொன்ன வழிபாட்டு மரபு மட்டுமல்லாது சில்வண்டு கத்தினால், தவளை கத்தினால், தட்டான் தாளப்பறந்தால், வானவில் தோன்றினால், மழை பொழியும் என மக்கள் நம்பினர். நிலவினைச் சுற்றிலும் காணப்படும் சிறுவட்டம் பெருவட்டம் முதலான அறிகுறிகளால் மழை பொழியும் என நம்பினர்.

## அம்மை நோய் குறித்த நம்பிக்கை சார் வழிபாட்டு முறைகள்

இது கோடைக் காலத்தில் வரும் ஒரு வித நோய். வெப்பத்தின் மிகுதியால் மனிதனுக்கு பரவுகிறது. அறிவியலாளர்களின் கூற்றுப்படி இது ஒரு வைரஸ் நோய் தொற்று. இது விளையாட்டாமை, தட்டம்மை, மணல் வாரி அம்மை, வாயம்மை, தாளம்மை என பல வகைகளில் மக்களைப் பாதித்துள்ளதை அறிந்துக் கொள்ள முடிகின்றது. இவ்வம்மை நோயானது மாரியம்மனின் கோபத்தால் வருகின்றது. இது பரவும் நோய் என்பதால் பாதிக்கப்பட்டவரை தனிமைப் படுத்துதல் அவசியம். இது குணமாக குறைந்தது ஒன்பது நாட்களாவது ஆகும்.

ஒன்பது நாட்களுக்குப் பின் உடலில் ஆமணக்கு கொட்டை, வேப்பிலை, மஞ்சள் முதலானவற்றை அரைத்து பூசி குளிக்க வைப்பர். இவற்றை அறிவியல் ரீதியாக பார்க்கும் போது ஆமணக்கு உடலுக்கு குளிர்ச்சியையும், வேப்பிலை மருந்து பொருளாகவும், மஞ்சள் கிருமி நாசினியாகவும் உடலில் உள்ள புண்களை ஆற்றும் மருந்தாகவும் உள்ளது. இவற்றை உடலில்

பூசும்போது நோய்கள் விரைந்து குணமடையும். "வேப்பிலையில் அம்மன் தங்கி அருள்கிறாள் என மக்கள் நம்புகின்றனர். மேலும் இது சிறந்த ஒரு கிருமி நாசினியாகவும் செயல்படுகிறது. எனவே தன் வீட்டிலும் நோய்வாய் பட்டவர்களின் படுக்கையிலும் வேப்பிலை இடுவதை மக்கள் பின்பற்றுகின்றனர்".

## சத்தியம் செய்தல் பற்றிய நம்பிக்கை

சத்தியம் என்றால் 'உண்மை' 'உறுதி என பொருள்படும் சத்தியமா என்றால் உளவியல் ரீதியாக உறுதியாக சொல்வது என்பதாகும். சத்தியமாக என்ற வார்த்தையை கூறினால் அனைவரும் நம்புவர். இதற்கு சாட்சியாக கடவுள், இயற்கை பொருள், குழந்தைகள், முன்னோர்கள் முதலான ஒன்றன் மீது சாட்சியாகச் சொல்வர். பொய் கூறாமையை உணர்த்துவதே இச்செயல் ஆகும். இன்றும் கூட கிராமப்புறங்களில் கடவுள் மீது ஆனையாக, என் குழந்தையின் மீது ஆனையாக, சத்தியமாக, நான் அதை எடுக்கல என்று கூறுவர். மேற்கண்ட வார்த்தையைப் பயன்படுத்துபவர்கள் உண்மையை மட்டுமே கூறுவர் என்பதே நிதர்சனமான உண்மை.

இவ்வாறு சத்தியம் செய்பவர்கள் அம்மனின் முன் கற்பூரம் ஏற்றியோ அல்லது குழந்தையை தாண்டியோ அல்லது ஒரு துண்டினைப் போட்டு தாண்டியோ தனது உண்மைத் தன்மையை நிரூபிப்பர்.

"வேட்டி போட்டுத் தாண்டி தாரேன்

கற்பூரத்தைக் கைப்போட்டு அணைச்சித் தாரேன்"

என்ற நாட்டுபுறப் பாடலின் மூலம் இதனை அறியலாம். "உறுதிமொழியை மீறினால் தெய்வதண்டனை கிடைக்கும் என்ற அடிப்படையில் சத்தியம் செய்யும் வழக்கம் தோன்றியிருக்க வேண்டும் எனவும் சத்தியத்தை மீறினால் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாகி விடுவோம் என்றும் மேற்சொன்ன நடைமுறையை நம் முன்னோர்கள் கையாண்டனர்" (Sakthivel, 2021).

## செடல் குத்துதல் அலகு குத்துதல்

தனிப்பட்ட மனிதனின் வேண்டுதலுக்காக கடவுளுக்கு செலுத்த வேண்டிய காணிக்கை முறைகளில் ஒன்று தான் இந்த செடல் குத்துதல். "நாக்கில் இரும்பு அல்லது அலுமினியம் சார்ந்த திரிசூலம் அமைப்பு கொண்ட கம்பியினை நாக்கில் குத்திக்கொண்டு கடவுளை தொழுவர். இம்முறை பெரும்பாலும் அம்மன் மற்றும் முருகன் போன்ற தமிழ் தெய்வங்களுக்கு நிகழ்த்தப்படுகின்றது" (Karunakaran, 2022, Personal Interview, Salem).

செடல் குத்துதல் முறையில் பல சிறிய ஊசிகளால் உடலில் பல இடங்களில் குத்தி அதில் எலுமிச்சை கனிகளை தொங்கவிட்டு நேர்த்திக்கடன் செய்வது ஒருவகை வழிபாட்டு முறையாகும். இதிலிருந்து வெளியேறும் எலுமிச்சை சாரானது காயத்தை விரைவில் குணப்படுத்த உதவுகின்றது. இதனால் "இன்றைய நவீன மருத்துவ கண்டுபிடிப்புக்கான அக்குபஞ்சர் என்னும் முறைப்படி உடலில் சுரப்பிகள் நன்றாக தாக்கப்பட்டு நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகின்றது" என்ற கூற்று இங்கு ஒப்புநோக்கத் தக்கது".

## பலியிடுதல்

பலியிடுதல் என்பது பழங்காலம் தொட்டே தமிழகத்தில் நிலவி வந்த ஒரு வழிபாட்டு முறை ஆகும். காடுறை தெய்வங்களுக்கு பலியிட்டு வணங்கும் மரபு மற்றும் வழக்கம் தொன்று தொட்டு நம் இனத்தில் இருந்து வந்த ஒன்றாகும்.

"மறிக்குரல் அறுத்து வேற்றுப்

பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்தி"

"சிறுமறிக் கொன்று இவன் நறுநுதல் நீவி" (Swaminatha Iyer, 2009)

முதலான பாடல்களில் பலியிடுதல் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. "தெய்வத்திற்கு பலியிட்டு படையல்களைப் படைக்கும்போது துடியடிப்பது, ஆடுவது, பாடுவது என பழங்கால மக்கள் மத்தியில் காணப்பட்டது".

கலிங்கத்துப்பரணையில் கோவில் பாடியது என்ற பகுதியில் ஊருக்குச் செல்லும் முன் காளிதேவிக்கு வேண்டிக்கொண்டு வீரர்கள் வெற்றிக்குப் பின் நல்லபடியாக நாடு திரும்பினால் தன் தலையணை அறுத்து பலியிட்டு வழிபாடு நடத்துவது குறித்த தகவல் இடம்பெற்றுள்ளது. இதனை

"அடிக்கழுத்தி னுடன் சிரத்தை அரிவாலாலோ

அரிந்த சிரம அணங்கின் கைக் கொடுப்பாராலோ

கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ

குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ"

என்ற பாடல்வழி அறியலாம் (Puliyur Kesigan, 2008).

அவ்வாறு "பலியிடும்போது பலிபீடிகையும், பின் கொற்றவையை தொட்டு வணங்கியும் தலையைப் பலியிட்டனர்". "பொதுவாக ஆடு கோழி போன்ற ஜீவராசிகள் விரைவாக இனப்பெருக்கம் செய்து வளரும் தன்மையைக் கொண்டது எனவே கால்நடைகள் பெருகாமல் தடுக்கவும் தோளினை ஏற்றுமதி செய்யவும் குறிப்பிட்ட நாளை மக்கள் தேர்ந்தெடுத்தனர் எனவே அனைத்து கிராமங்களிலும் ஆடுகளை வெட்டி பலியிடுவார்கள் இதனால் தோளின் தரம் ஒரே மாதிரியும் வியாபாரத்திற்கு உகந்ததாகவும் இருக்கும்".

## சாமி ஆடுதல்

வேப்ப மரமானது, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் மியான்மர் ஆகிய பகுதிகளில் அதிகம் விளையக்கூடியது. பலவிதமான நோய்களை குணப்படுத்தும் தன்மையுடைய அட்சய பாத்திரமாக வேப்ப மரம் கருதப்படுகிறது. "வேப்பமரம் என்பது தெய்வத்துடன் குறிப்பாக துர்கை, காளி, மாரியம்மன் போன்ற பெண் தெய்வங்களுக்கு மிக உகந்ததாக கருதப்படுகிறது. காரணம், வேப்ப மரம் என்பது தேவியின் அம்சம் ஆகும்". சாமி ஆடுதல் என்பது சங்க காலம் தொட்டே பின்பற்றப்பட்ட ஒன்றாகும்.

சங்க காலத்தில் வேலன் வெறியாட்டு என்பதன் எச்சமே சாமியாட்டம் ஆகி இருக்கலாம். பண்டைய காலத்தில் முருக வழிபாட்டில் நாட்டுப்புற இசையுடன் கூடிய சாமி ஆட்டம் இடம் பெற்றது பற்றி திருமுருகாற்றுப்படை (245-48) குறிப்பிடுகின்றது. வேப்ப மரத்திற்கு இயல்பாக தீய சக்திகளை விரட்டும் தன்மை உண்டு அதனால் தான் சாமியாடுதலின் போது வேப்ப இலைகளை பயன்படுத்துகிறார்கள்.

## முடிவுரை

தீமைகளில் இருந்து மனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்ள முயலும் தற்காப்பு முயற்சியும் நன்மையினை எதிர்நோக்கும் விருப்பமும் இறை நம்பிக்கைகளை நிலை நிறுத்துகின்றன. இந்நம்பிக்கை முறையே ஆபத்தில் இருந்து தன்னைக் காக்கும் என்பதை உணர்ந்த மனித இனம், தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப தங்களுக்கென ஒரு வழிபாட்டு முறையினை உருவாக்கி, அதன் மூலம் தன்னிறைவை எட்டுகிறான். இவ்வகைப் பட்ட வழிபாட்டு முறையின் எச்சங்களுக்குள் மாரியம்மன் வழிபாட்டுமுறைகள் அனைத்தையும் அடக்கலாம். இது பெருந்தெய்வ வழிபாட்டு முறையில் இருந்து வேறுபட்டதாகும். சமூகத்தில் அவரவர்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப தங்கள் இனத்தினை அடையாளப் படுத்திக் கொள்ளும் விதமாக பலவகை பெயர்களில் மாரியம்மன் வழிபாடும் நம்பிக்கை சார் மரபுகளும் தமிழகத்தில் பரவலாக ஊர்தோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை மேற்கண்ட சான்றுகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## References

Aldrich, C.A. (2000) The Primitive Mind and Modern Civilization, Routledge, UK

Bhakthavachala Bharathi, (1999) Panpaattu Maanidaviyal, Meiyappan Pathippagam, Chidambaram, India

Gandhi, K. (2008) Tamilar Palakkavalakkankaļum Nampikkaikaļum, International Institute of Tamil Studies, Chennai, India.

Puliyur Kesigan (2008) Kalingattuparani, Paari Nilayam, Chennai, India.

Sakthivel, S. (2021) Folklore Study (Tamil), Manivaskar Publishing House, Chennai, India

Swaminatha Iyer, U.Ve. (2009) Kurunthogai moolamum uraiyum, U.V.SA Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License